மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அவர்கள் கொள்முதல் செய்வதையும் நமக்குத்தான் கொடுக்கிறார்கள்.

HIGH YIELDING GRAIN IN TIRUCHIRAPPALLI DISTRICT.

*390 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the Government proposes to bring under plough more acreage for high yielding grain in Tiruchirappalli district; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) அமோக விளைச்சல் உணவு தானியம் 1967-68 இல் இருந்த 73,163 ஏக்கரிலிருந்து 1968-69-க்கு 1,68,000 ஏக்கருக்கு உயர்த்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு கே. விநயகம் : அமோக விளைச்சல் அடிப்படையிலே என்ன என்ன கிரெய்ன்ஸ், வாட் கைண்ட் ஆப் கிரெய்ன்ஸ், கோ. 2, ஏடிடி. 27 என்றெல்லாம் சொல்லுகிறார்களே, என்ன என்ன கிரெய்ன்ஸ் அமல் செய்யப்படுகிறது ?

According to the figures given by the Hon. Minister, will he be pleased to state what varieties of grain are being introduced in this area?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் உறுப்பினர் விநயகம் அவர்கள் தப்பித்துக்கொண்டார்கள். அவர்கள் என்ன என்ன வகை நெல் என்று பெயரைக் குறிப்பிடுகின்ற நோக்கிலே இங்கே அமலில் இல்லாத கோ. 2 பற்றியெல்லாம் சொன்னார்கள். ஒருவேளை திருத்தணியிலே போடுகிறார்களோ, என்னவோ ? ஏடிடி 27, சிஓ 25, சிஓ 29 ஆகியவை தஞ்சாவூர் மாவட்டத்திலே அமலாக்கப்படுகிறது. திருச்சியிலே அதே நெல்தான். அதற்கு மேல் ஐ. ஆர். 8 வடிகால் வசதியுள்ள பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது.

திரு. தி. தீர்த்தகிரி கவுண்டர் : தலைவர் அவர்களே, விவசாயிகள் கஷ்டப்பட்டு விளைவித்த நெல்லைக் கண்டிப்பாகக் கட்டாயப்படுத்திக் கொள்முதல் செய்யவேண்டுமென்று மன்ற உறுப்பினர்கள் சொல்கிறார்கள்.. ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொள்முதல் பற்றிய கேள்வி போய்விட்டது.

THIRU B. VENKATASWAMY : May I know the increase in produce after introducing these graded grains in Thanjavur district ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது திருச்சி டிஸ்ட்ரிக்ட் பற்றியது.

THIRU B. VENKATASWAMY : I will amend the question, Sir, may I know whether the produce increased after introducing these graded grains in Tiruchirappalli district?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இன்றைய தினத்தில் 1967—68-லே 73,163 டன்னாக இருந்தது, 1968—69-லே 1,66,184 டன்னாக உயர்ந்திருக்கிறது.

திரு. பா. நாகலிங்கம் : தலைவர் அவர்களே, ஐ. ஆர். 8 முன்னதாக 370 ரூபாயிலிருந்து வந்தது. செங்கற்பட்டு மாவட்டத்திலே பல பகுதிகளில் ஐ. ஆர். 8 சாகுபடிக்குப் பயன்படவில்லை. அதனால் விவசாயிகளுக்கு............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது வேறு கேள்வி.

திரு. கே. பி. எஸ். மணி : சிஓ. 29 என்ற அதிக விளைச்சல் தரக்கூடிய தானியம் தஞ்சாவூரில் பெய்வூராகி அதனால் விளைச்சல் குறைந்துவிட்டதாலே அதிகாரிகளே அந்த விதையைக் கொள்முதல் பண்ணவேண்டியதில்லை என்று சொல்லியிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : சிஓ. 29 சாகுபடிக்கு கடைசி 2 மாதத்திற்குத் தண்ணீர் வேண்டியிருக்கிறது. ஏடிடி. 5, சிஓ. 31 ஆகிய ரகங்களை சாகுபடி செய்வதற்காக அரசாங்கம் விவசாயிகளுக்கு வழங்குகிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, சென்ற முறை நெல்லை மாவட்டத்தில் ஐ. ஆர். 8 நெல்லில் அதிகமாக கலப்பு இருந்தன் காரணமாக அதிகமாக விளைச்சல் இல்லை என்று கூறப்படுகிறது. கலப்பு இல்லாத நெல்லை அரசாங்கம் கொடுக்குமா ? மேலும் ஐ. ஆர். 8, ஐ. ஆர். 5 போன்ற ரகங்களை ஹை ஈல்டிங் வெரைட்டிகளை விவசாயிகள் பயிரிடுவதற்கு தரக்கூடிய முறையில் அரசாங்கம் ஏதாவது இன்சென்டிவ் கொடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஐ. ஆர். 8 போன்ற பொறுக்கு விதைகளில் கலப்படம் இருக்க நியாயமில்லை. எங்கே இருக்கிறது என்று அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நல்லது. ஐ. ஆர். 8, 5 போன்றவற்றை சாகுபடி செய்கிறவர்களுக்குக் கூடுதலாக இரசாயன உரம் தேவைப்படுகிறது. எவ்வளவு வேண்டுமானாலும் அந்த உரம் கிடைக்கின்ற சூழ்நிலை இருப்பதாலே விவசாயிகள் தகுந்த யோசனையின் பேரில் பயிர்செய்தால் நல்ல விளைச்சல் ஏற்படும்.

AUSTRALIAN JERSEY BULLS

*391 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether Australian jersey bulls were received by the Animal Husbandry Department during February and April 1968; and

(*b*) if so, the particulars thereof ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) & (இ) சென்னைத் துறைமுகத்தில் 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27-ம் தேதியிலும், 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28-ம் தேதியிலும் கொழும்புத் திட்டத்தின்கீழ் 150 வெளிநாட்டுக் கால்நடைகள் இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றில் இந்திய அரசு 20 ஜெர்சி காளைகளைத் தமிழ் நாட்டிற்கென ஒதுக்கிவிட்டு எஞ்சிய காளைகளை பிற மாநிலங்களுக்கு ஒதுக்கியது. சென்னை, கோயம்புத்தூர், மதுரை ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மேம்பாட்டு முனைப்புத் திட்டத்திற்கென ஒவ்வொரு திட்டத்திற்கும் 6 ஜெர்சி காளைகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. இரண்டு காளைகள் சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ளன.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், இந்த ஜெர்ஸி காளைகளை வழங்குகின்ற நேரத்தில் நெல்லை மாவட்டத்திற்கு ஒரு காளை கூட வழங்காமல் இருக்கிறார்கள் அது ஏன் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.